# செயலட்டை - தமிழ் (08)
# பிரமி கல்வி நிலையம்
S. மோகன் 0779685514

மாணவர் பெயர் : ....................................

**அறிவுறுத்தல்.**

* பந்தி / பாடல்களை வாசிக்குக.
* பந்தி / பாடல்களை மாத்திரம் துணையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளிக்குக.

**01)** அங்கிருந்து நாங்கள் பேராதனைத் தாவரவியல் பூங்காவிற்குச் சென்றோம். ஆகா எவ்வளவு பெரிய பூங்கா விதவிதமான மரங்கள், செடிகள், தாவரங்கள், பூச்செடிகள் இவை எல்லாம் எமக்கு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. "இலங்கையில் உள்ள மிகப்பெரிய தாவரவியல் பூங்கா இதுவாகும்" என ஆசிரியர் கூறினார். அழகிய சிறிய குளங்களும் காணப்பட்டன.

1. பந்தியில் வந்துள்ள பெயரடைமொழிச் சொற்கள் இரண்டினை எழுதுக.

   ........................................................................................................................

2. "ஆகா" எனும் சொல்லுக்கு அருகில் வரவேண்டிய நிறுத்தற் குறியின் பெயர் யாது?

   ........................................................................................................................

3. பந்தியில் வந்துள்ள உயர்திணை பன்மை தன்மைச் சொல் யாது?

   ........................................................................................................................

4. பந்தியில் வந்துள்ள உயர்திணை இறந்தகால பன்மை வினைமுற்று ஒன்றினை எழுதுக.

   ........................................................................................................................

5. இலங்கையின் மிகப்பெரிய தாவரவியல் பூங்கா அமைந்துள்ள மாவட்டம் எது?

   ........................................................................................................................

**02)** வண்ணத்துப்பூச்சி தன் கதையைக் கூறத் தொடங்கியது. "நாங்கள் பூக்களிலுள்ள தேனைக் குடிப்பவர்கள். எங்கள் குடும்பம் மிகவும் பெரியது. அழகிய நந்தவனம் எங்கள் இருப்பிடம். வண்ண வண்ணப்பூக்களின் மணமும் எமது அழகும் காண்போரைப் பரவசப்படுத்தும். அண்மையில் நாங்கள் குடியிருந்த நந்தவனம் சில மனிதர்களால் அழிக்கப்பட்டது. இதனால் எமது உறவினர்கள் வெவ்வேறு திசைகளை நோக்கிப் பிரிந்து சென்றுவிட்டனர்"

1. வண்ணத்துப்பூச்சிகளின் இருப்பிடம் எது?

   ........................................................................................................................

2. அந்த இடம், அண்மையில் யாரால் அழிக்கப்பட்டது?

   ........................................................................................................................

3. "சொந்தக்காரர்கள்" என்ற கருத்தைத் தரும் சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

   ........................................................................................................................

4. பந்தியில் இடம்பெறும் தன்மைப் பன்மைச் சொல்லை எழுதுக.

   ........................................................................................................................

5. 'சிறியது' என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

   ........................................................................................................................



S.MOHAN

6. 'பூக்களிலுள்ள' என்பதைப் பிரித்து எழுதுக. ..........................................................

03)

| |
|---|
| **உத்தமர்கள் சரிதைகளை** |
| **உலகத்தோர் மீட்டட்டும்** |
| **நித்தம் மக்கள் தேடுகின்ற** |
| **நிம்மதியும் பூக்கட்டும்** |

| |
|---|
| **இத்தரையில் வாழுமினம்** |
| **இன்னலற்று வாழட்டும்** |
| **யுத்தமின்றி ஒற்றுமைகள்** |
| **யுக அழிவு ஒழியட்டும்** |

1. இப்பாடலில் இடம்பெறும் உயர்திணை பன்மை பலர்பால் பெயர்ச்சொல் ஒன்றினைத் தருக.

   ..........................................................................................................

2. "துன்பம்" என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.

   ..........................................................................................................

3. ஆக்கம் என்பதன் எதிர்க்கருத்தை எழுதுக்

   ..........................................................................................................

4. "வரலாற்றை" என்ற கருத்தைத் தரும் சொல் இப்பாடலில் உள்ளது. அதனை இனங்கண்டு எழுதுக.

   ..........................................................................................................

5. "நித்தம்" என்பதன் பொருள் யாது?

   ..........................................................................................................

04)

| |
|---|
| **காக்கை பாட்டுப் பாடவே** |
| **காலை நேரம் விடிந்தது** |
| **தூக்கம் போதும் தம்பியே** |
| **சோம்பல் ஏனோ எழுந்திடு** |

| |
|---|
| **ஊக்கம் கொண்டு உழைத்திடின்** |
| **உயர்ந்த வாழ்வு கிடைத்திடும்** |
| **தூக்கம் மிகுந்த சோம்பலால்** |
| **துவண்டு போகும் வாழ்க்கையே!** |

1. முதற் கவிதையில், நாள் ஒன்றின் எவ்வேளை பற்றிக் கூறப்படுகின்றது?

   ..........................................................................................................

2. பாட்டுப் பாடியது எது?

   ..........................................................................................................

3. 'சுறுசுறுப்பு' என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லைத் தெரிந்தெடுத்து எழுதுக.

   ..........................................................................................................

4. இரண்டாவது கவிதையில் இடம்பெறும் எழுவாய் அடைமொழியை எழுதுக.

   ..........................................................................................................

5. ஊக்கமுடன் உழைப்பவருக்குக் கிடைப்பது எது?

   ..........................................................................................................

6. 'வாழ்க்கை' எதனால் துவண்டு போகும்?

   ..........................................................................................................



S. MOHAN

**05)**

| | |
|---|---|
| **கடலின் மீது செல்லும் கப்பல்**<br>**பார் தம்பி பார் - அதைக்**<br>**காணப் பலர் வருவதையே**<br>**பார் தம்பி பார்!** | **தடதட வென்று அலைகள் வந்து**<br>**பார் தம்பி பார் - காலைத்**<br>**தழுவி விட்டுப் போவதையே**<br>**பார் தம்பி பார்** |

1. இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள காட்சி எது?

   ………………………………………………………………………………………………………

2. இப்பாடலில் இடம்பெற்றுள்ள இரட்டைக்கிளவிச் சொல்லினை எழுதுக.

   ………………………………………………………………………………………………………

3. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அ∴றிணை ஒருமை பெயர்ச்சொல் ஒன்றினை எழுதுக.

   ………………………………………………………………………………………………………

4. இப்பாடலில் இடம்பெற்றுள்ள உயர்திணை ஆண்பால் சொல்லினை எழுதுக.

   ………………………………………………………………………………………………………

   ………………………………………………………………………………………………………

**06)** பூமியின் பெரும்பகுதி நீரினால் சூழப்பட்டுள்ளது. ஆயினும் நாம் குடிப்பதற்கு மழை நீரை மட்டுமே பயன்படுத்துகிறோம். காடுகள் பெருமளவில் அழிக்கப்படுவதால் மழை வெகுவாகக் குறைந்து விட்டது. ஆறுகள், குளங்கள் எல்லாம் வற்றி வறண்டு காணப்படுகின்றன. இதனால் நாம் இன்று தரைக்குக் கீழே உள்ள நீரைப் பயன்படுத்தும் நிலைக்கு ஆளாகி விட்டோம்.

1. நாம் குடிப்பதற்கு எந்த நீரைப் பயன்படுத்துகின்றோம்?

   ………………………………………………………………………………………………………

2. பந்தியில் இடம்பெறும் நீர் நிலைகள் இரண்டையும் எழுதுக.

   ………………………………………………………………………………………………………

3. நாம் இன்று எதற்குக் கீழே உள்ள நீரைப் பயன்படுத்தும் நிலைக்கு ஆளாகிவிட்டோம்?

   ………………………………………………………………………………………………………

4. ''வனங்கள்'' என்பதன் ஒத்த கருத்துச் சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

   ………………………………………………………………………………………………………

5. பந்தியில் இடம்பெறும் தன்மைப் பன்மைச் சொல்லை எழுதுக.

   ………………………………………………………………………………………………………

6. பந்தியில் இடம்பெறும் இணைமொழியை எழுதுக.

   ………………………………………………………………………………………………………



S. MOHAN

**07)** மலர்களின் வாசம் கண்டு அவைகளைச் சுற்றிச்சுற்றி ரீங்காரமிடும் வண்டினங்கள் ஒரு புறம், வண்ண வண்ண இறக்கைகளால் சிறகடித்து பறந்து திரியும் வண்ணத்துப்பூச்சிகள் மறுபுறம், இவை சிறுவர்களைப் போன்று பெரியவர்களையும் பரவசமடையச் செய்கின்றன.

1. வண்ண வண்ண இறக்கைகளால் சிறகடித்துப் பறப்பவை எவை?
   ……………………………………………………………………………………
2. மணம் எனும் சொல்லின் ஒத்த பதம் எது?
   ……………………………………………………………………………………
3. சிறியவர் எனும் சொல்லின் எதிர்க்கருத்து யாது?
   ……………………………………………………………………………………
4. இது எனும் சொல்லின் பன்மைச்சொல் யாது?
   ……………………………………………………………………………………
5. பந்தியில் வந்துள்ள அடுக்கு மொழி ஒன்றை எழுதுக.
   ……………………………………………………………………………………
6. அ்ஃறிணை பன்மை நிகழ்கால வினைச்சொல் ஒன்று?
   ……………………………………………………………………………………

**08)** நீலவானைச் செந்நிறமாக்கிய கதிரவன் தன் பொற்கரங்களை நீட்டிப் பனித்துளிகளைத் தொட்டுச் செல்கிறான். கதிரவனின் பொற்கரம் பட்டதும் இலைகளின் நடுவே இரத்தினக் கற்களாக மின்னிய பனித்துளிகள் மெல்ல மெல்ல மறையத் தொடங்கின.

1. நீலவானைச் செந்நிறமாக்கியவன் யார்?

   ……………………………………………………………………………………
2. கை எனும் சொல்லின் ஒத்தகருத்தை எழுதுக?

   ……………………………………………………………………………………
3. பெயரடைமொழிச் சொல் ஒன்று தருக?

   ……………………………………………………………………………………
4. தோன்ற எனும் சொல்லின் எதிர்ப்பதத்தை எழுதுக?

   ……………………………………………………………………………………
5. பந்தியில் வந்துள்ள அடுக்குமொழி ஒன்று எழுதுக?

   ……………………………………………………………………………………
6. கல் எனும் சொல்லின் பன்மைச் சொல்லை எழுதுக?

   ……………………………………………………………………………………
7. எதன் நடுவே இரத்தினக் கற்களாக பனித்துளிகள் மின்னின?

   ……………………………………………………………………………………
8. பொற்கரங்கள் எனும் சொல்லைப் பிரித்து எழுதுக?

   ……………………………………………………………………………………

S. MOHAN